புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஏப்ரல் 17, 2025 • புரட்சி 25 • முழக்கம் 14 • விலை ரூ.3.00



# சனாதன–ஜாதி எதிர்ப்புக் கூட்டங்களுடன் கழகம் எடுத்த அம்பேத்கர் விழாக்கள்

**சென்னை** புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளை ஒட்டி, 14-04-25 காலை 9:30 மணியளவில், அடையார் அம்பேத்கர் மணி மண்டபத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.



அதைத் தொடர்ந்து 10:30 மணியளவில் மாவட்ட செயலாளர் இரா.உமாபதி தலைமையில் மயிலாப்பூரில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டது...

மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர் இராவணன், வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு ராஜேந்திரன், கழக இளைஞரணி அமைப்பாளர் ப.அருண ஆகியோர் உட்பட சென்னை கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**தென்சென்னை** காலை 8 மணிக்கு, சென்னை ஆதம்பாக்கம் அம்பேத்கர் சிலைக்கு, தோழர்கள் மாலை அணிவித்து, கொள்கை முழக்கமிட்டு மரியாதை செலுத்தினர். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய “அம்பேத்கருக்கு இந்துமதச் சாயம் பூசும் அவதூறுகளுக்கு மறுப்பு” நூல்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்வை திவிக தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், தோழர் இரண்யா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

இன ஒதுக்கல் பேசும் சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடு...
மயிலாடுதுறை மாநாட்டுத் தீர்மான விளக்கத் தொடர் கூட்டம்

ஏப்ரல் 8,10,12 ஆகிய நாட்களில் மாலை 5 மணியளவில் பெரம்பூர் காந்தி சிலை அருகில், வில்லிவாக்கம், அம்பேத்கர் சிலை அருகில், சேத்துப்பட்டு, அம்பேத்கர் திடலில் கூட்டங்கள் நடைபெற்றன. ஜாதி ஒழிப்பு பகுத்தறிவுப் பாடல்களை வீரமணி, பேரன்பு பாடினர். சேத்துப்பட்டு இராஜேந்திரன், தினகரன், சேத்துப்பட்டு பகுதி பொறுப்பாளர் மா. இராஜன் அவர்களின் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, U2 BRUTUS மைனர், அன்பு தனசேகர் ( தலைமை செயற்குழு உறுப்பினர்), இரா.உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), எட்வின் பிரபாகரன் (தென் சென்னை மாவட்ட அமைப்பாளர்), தபசி குமரன் (தி.வி.க-தலைமை நிலையச் செயலாளர்), சேத்துப்பட்டு இராசேந்திரன் (வடசென்னை மாவட்டத் தலைவர்) சுபாஷ் சந்திர போஸ் (விசிக- மண்டலச் செயலாளர்), சதாசிவம் (விசிக-மாணவரணி செயலாளர்), திருப்பூர் மகிழவன், பேரன்பு (தமிழ்நாடு மாணவர் கழகம் சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் கருத்துரையாற்றினர். மேலும் தி.வி.க தோழர்கள் விசிக தோழர்கள், தோழமை இயக்கத் தோழர்களும் பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.

4வது கூட்டம் பொதுக்கூட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டது, தானா தெரு, புரசைவாக்கம் பகுதியில் வடசென்னை மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஜாதி ஒழிப்பு பகுத்தறிவு பாடல் பாடிய வீரமணி, பேரன்பு, மகிழவன், தபேலா அருண் ஆகியோரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

திராவிட இயக்க சிந்தனையாளர் எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர் அவர்களின் படத்திறப்பு மற்றும் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். கருத்துரையாற்றிய தோழர்கள் திருப்பூர் மகிழவன், இரண்யா, புதுவை தீனா(பெரியார் சிந்தனையாளர் இயக்கம்), தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்), இரா.உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்),நிறைவாக கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். அருள்தாஸ் திவிக நன்றியுரை கூறினார். மேலும் தி.வி.க தோழர்கள், வழக்கறிஞர் திருமூர்த்தி மற்றும் இயக்க தோழர்களும், பகுதி மக்களும் கலந்து கொண்டனர். பரப்புரைப் பயணத்தில் முழுமையாகச் சென்ற கழக இளைஞரணி அமைப்பாளர் ப. அருண், எட்வின் பிரபாகரன் தொடர்ந்து பாடல்கள் பாடிய வீரமணி ஆகியோர்க்கு பொதுச்செயலாளர் சால்வை அணிவித்து பாராட்டினார்.

மேடையில் வழக்கறிஞர் திருமூர்த்தி, தட்சிணாமூர்த்தி, திருப்பூர் மகிழவன் ஆகியோரின் பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடபட்டது. நிறைவாக அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

**திருப்பூர்:** மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 14.04.2025 அன்று காலை 09.30மணியளவில் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள், சமத்துவ நாள் நிகழ்வு திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் எதிரில் அமைந்துள்ள புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. கழகப் பொருளாளர் சு.துரைசாமி, அவர்களின் தலைமையில் மாவட்ட தலைவர் முகில்ராசு அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் குறித்தும் அவர் ஆற்றியபணிகள், குறித்தும் இனி நாம் மேற்கொள்ளவிருக்கும் செயல்பாடுகள் குறித்துக் கழகத்தின் இணையதளப் பொறுப்பாளர் பரிமளராசன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி ஆகியோர் உரையாற்றினார்கள். நிறைவாக கழகப் பொருளாளர் சு.துரைசாமி அவர்கள் நிறைவுரையாற்றினார்.

மேலும் தமிழ்நாடு மாணவர் கழக முத்தமிழ் ஜாதி ஒழிப்பு, சமத்துவ நாள் உறுதிமொழியினைக் கூற உறுதி மொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது. தமிழ்நாடு மாணவர் கழக யாழினி நன்றி கூறினார். அதனைத் தொடர்ந்து “இன ஒதுக்கல் பேசும் சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடு!” எனும் தலைப்பில் திருப்பூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் தெருமுனக் கூட்டங்கள் நடைபெற்றன.





10.00 மணி - பெரியார் அண்ணா சிலை, 12.00 மணி - அனுப்பர்பாளையம், 3.30 மணி அம்மாபாளையம் பகுதியிலும் 5 மணிக்கு ஆத்துப்பாளையம் பகுதியிலும் கூட்டங்கள் நடைபெற்றன.

தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, ஊடகவியல் பொறுப்பாளர் துரை.பரிமளராசன், புரட்சிகர இளைஞர் முன்னணி பொறுப்பாளர் தமிழ்அமுதன், மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, மாநகரத் தலைவர் வீ.தனபால், மாநகரச் செயலாளர் மாதவன், மாநகர அமைப்பாளர்கள் முத்து, சரசுவதி, ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், பல்லடம் ஒன்றிய அமைப்பாளர் சண்முகம், தனகோபால்,பல்லடம் தேன்மொழி, முத்துலட்சுமி, ராஜ்குமார் ஆத்துப்பாளையம் மதன், இனியன், 15 வேலம்பாளையம் கார்த்திக், வெங்கட் சக்தி, தமிழ்நாடு மாணவர் கழக தோழர்கள் சிபி, யாழிசை, எழில் பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேட்டூரில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் 135 - வது பிறந்த நாள் விழா சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக்கழகத்தின் சார்பாக மேட்டூர் அச்சங்காட்டிலுள்ள புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கமிடப்பட்டது
.
நிகழ்வில் தலைமைக்குழு உறுப்பினர்கள் காவை ஈஸ்வரன், சக்திவேல், மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ் மற்றும் மகளிரணி பொறுப்பாளர் சுதா ஒன்றிய பொறுப்பாளர் விஜி மற்றும் Rs பகுதி செயலாளர் விவேக் மற்றும் பொறுப்பாளர்களும் தோழர்களும் கலந்து கொண்டனர்.

**சேலம்:** கிழக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் தெருமுனைக் கூட்டங்கள்!

கருப்பூர் காவல் நிலையம் அருகில், கொல்லப்பட்டி பேருந்து நிறுத்தம் பழைய சூரமங்கலம் பகுதி, பெரிய அம்மாபாளையம் பகுதியில் ஏப்ரல் 12-இல் 4 தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழக சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் சக்திவேல் தலைமை வகித்தார். சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், ஏற்காடு பெருமாள் முன்னிலை வகித்தார்.

பொன்ராஜ் - கடலரசன் அவர்களின் பறை இசை மற்றும் பகுத்தறிவு பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது. சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாநகர செயலாளர் ஆனந்தி, சேலம் மாநகர தலைவர் பாலு, சேலம் மாவட்ட இளைஞர் அணி தலைவர் ஏற்காடு தேவ பிரகாஷ் ஆகியோர் கூட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கினர்.

இறுதியாக இளம்பிள்ளை நகரத் தலைவர் ரமேஷ், அருள்பாண்டியன், சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் தோழர் பிரபாகரன் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. கடைவீதி உண்டியல் வசூலில் தோழர்கள் டேவிட், தங்கதுரை, அருள்பாண்டியன், முத்துராஜ், தேவராஜ், கோகுல், கவியரசு,பிரபாகரன் ஆகியோர் ஈடுபட்டனர்.

கருப்பூர் பகுதியில் கடைவீதி வசூலின் போது





பெண்கள் அதிக ஆதரவு அளித்து தாமாக முன்வந்து நன்கொடை அளித்தனர்.

**ஈரோடு:** தெற்கு மாவட்ட தி.வி.க. சார்பில் தெருமுனைக் கூட்டம் 13.04.25 அன்று சூரம்பட்டி காவல் நிலையம் அருகில் நடைபெற்றது. 14.04.25 அன்று புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் பேரணி மற்றும் சிலைக்கு மாலை அணிவித்தல் நிகழ்வு நடைபெற்றது. மாலை 6 மணி அளவில் ஈரோடு கொள்ளுக்காட்டு மேடு பகுதியில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி அவர்கள் தலைமையில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. செந்தில், விஜய் ரத்தினம், பவித்ரா, நல்லதம்பி, சுரேஷ், சந்தோசு, பழனிச்சாமி ஆகியோர் பங்கேற்றனர் மேலும் கொள்ளுக்காட்டு பகுதியை சேர்ந்த வழக்கறிஞர் முத்துச்சாமி அவர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு தெருமுனைக் கூட்டம் நடத்த உதவியதோடு தோழர்களுக்கு இரவு உணவு அளித்து தொடர்ந்து இது போன்ற ந நிகழ்ச்சிகளை இப்பகுதியில் நடத்த வேண்டுமாய் கேட்டுக் கொண்டார்.

### தலையங்கம்

## “குரியன் ஜோசப்” குழு காலத்தின் தேவை!

ஒன்றிய பாஜக ஆட்சி இந்திய அரசியல் அமைப்புக்குள் செயல்படும் மாநிலங்களின் அடையாளங்களை சிதைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. உரிமைகளை பறிப்பதற்கான முறைகேடான வழிமுறைகளை செயல்படுத்தி வருகிறது ஒன்றிய பாஜக ஆட்சி. இந்து ராஷ்டிரம் உருவாக்க மாநிலங்களின் மொழி மற்றும் கலாச்சாரங்கள் அவர்களுக்கு பெரும் தடையாக வந்து நிற்கின்றன. தமிழ்நாடு அரசு குறிவைத்து நசுக்கப்படுகிறது.

இந்து ராஷ்டிராவை திராவிட மாடல் முற்றாக எதிர்த்து நிற்பதே இதற்குக் காரணம். ஆளுநர் அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தி அரசுக்கு தந்த நெருக்கடிகளை சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றுள்ளார் தமிழ்நாடு முதல்வர். இது மாநிலங்களின் வரலாற்றில் நிலைப்பெற்று நிற்கும் சாதனை. இதைத் தொடர்ந்து ஒன்றிய ஆட்சியின் உரிமை பறிப்பு அடாவடிகளை எதிர்கொள்ள முன்னாள் உச்சநீதிமன்றம் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை அமைத்திருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

ஒன்றிய ஆட்சி சட்டத்தை எப்படி முறைகேடாகப் பயன்படுத்துகிறது என்பது குறித்தும் மாநில உரிமைகளை மீட்டுருவாக்கம் செய்வதற்கான வழிமுறைகளையும் இந்தக் குழு ஆராயப் போகிறது. தலைசிறந்த சமூகநீதியாளர்கள் அசோக் வர்த்தன் ஷெட்டி, பேராசிரியர் நாகநாதன் ஆகியோர் குழுவில் இடம்பெற்றுள்ளனர். குழுவின் செயல்பாடுகளாக நடைமுறையில் உள்ள சட்டங்கள், ஆணையங்களின் உரிமைகளை மறு மதிப்பீடு செய்வதோடு ஒத்திசைவுப் பட்டியல் குறித்தும் ஆராய இருக்கிறது.

அவசர நிலை காலத்தில் கல்வி மாநிலப் பட்டியலில் இருந்து ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. ஆனால் கடந்த கால ஒன்றிய ஆட்சிக் காலங்களில் மாநில கல்விக் கொள்கைகளில் ஒன்றிய அரசு தலையிடுவது இல்லை.

குறிப்பாக ராஜீவ் ஆட்சிக் காலத்தில் புதிய கல்விக் கொள்கையையும், “நவோதயா” பள்ளிகளையும் தமிழ்நாட்டில் திமுக-அதிமுக ஆட்சிகளில் ஏற்கப்படவில்லை. ஒன்றிய அரசின் மும்மொழிக் கல்வித் திட்டத்தையும் திமுக, அதிமுக ஆட்சிகள் ஏற்கவில்லை. அதற்காக ஒன்றிய ஆட்சி மாநில அரசுகளைப் பழிவாங்கியதில்லை. நிதி தரமாட்டோம் என்று மிரட்டியதும் இல்லை. மாநில உரிமைகள் பறிக்கப்படும் போதெல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர்களாக கலைஞர்,எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் போர்க் கொடி உயர்த்தி உள்ளனர். களத்தில் இறங்கி போராடியும் உள்ளனர்.

தமிழ்நாட்டிற்கான பொது விநியோகத்துக்கான ரேசன் அரிசி அளவை ஒன்றிய ஆட்சி வழங்காத போது முதல்வர் எம்ஜிஆர் பட்டினிப் போராட்டம் நடத்தினார். காவிரி நீர் உரிமை மறுக்கப்பட்ட போது ஜெயலலிதாவும் பட்டினிப் போராட்டம் நடத்தினார். ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட போது கலைஞரும் பட்டினிப் போராட்டம் நடத்தினார் அப்போதெல்லாம் ஒன்றிய அமைச்சர்கள் தமிழ்நாட்டுக்கு ஓடி வந்து உறுதிமொழிகளை வழங்கி சமரசம் செய்தனர். ஆளுநரை வைத்து மிரட்டவில்லை நாடாளுமன்றத்தில் அமைச்சர்கள் இப்போது போல் திமிர்த்தனமான கருத்துக்களை பேசியது இல்லை. கழகங்களை ஒடுக்க அமலாக்கத்துறையை அனுப்பியதும் இல்லை. இது தான் தமிழ்நாட்டின் கடந்த கால வரலாறு.

ஒத்திசைவுப் பட்டியல் என்பது மாநில அரசுகளின் உரிமைகளையும் உள்ளடக்கியது கலந்து ஆலோசிக்க வேண்டியது என்ற உண்மையை ஒன்றிய ஆட்சி ஏற்க மறுக்கிறது. இது குறித்து அரசியல் நிர்ணய சபையில் அம்பேத்கர் கீழ்க்கண்ட விளக்கத்தை அளித்தார்.

“கூட்டாட்சி என்றால் இரட்டை அரசாங்க அமைப்பு என்று அர்த்தம். நகல் அரசியல் அமைப்புச் சட்டம் ஒரு கூட்டாட்சி அரசியல் அமைப்புச் சட்டம்; அது இரட்டை அரசாங்க அமைப்பு முறையை உருவாக்கியுள்ளது. இந்த இரட்டை அரசாங்க அமைப்பு முறைப்படி மத்தியிலே ஒன்றியம் இருக்கும்; அதைச் சுற்றி மாநில ஆட்சி இருக்கும். அரசியல் அமைப்புச் சட்டப்படி தமக்கு ஒதுக்கப்பட்ட துறைகளில் அவை ஒவ்வொன்றிற்கும் இறையாண்மை(Sovereign Powers) உண்டு”.

தமிழ்நாட்டு முதலமைச்சர் இது குறித்து அமைத்துள்ள குரியன் ஜோசப் உயர்நிலைக் குழு ஆராய்ந்து தெளிவுபடுத்த இருக்கிறது. ஏற்கனவே அரசியல் சட்டத்தில் மசோதாக்களை அங்கீகரிக்க காலக்கெடு குறித்து தெளிவாக்கப்படாத நிலையில் தமிழக முதல்வர் நடத்திய சட்டப் போராட்டம் தெளிவுப்படுத்தி விட்டது. ஆளுநர்கள் 3 மாதங்களுக்கு மேல் மசோதாவை கிடப்பில் போட முடியாது என்று உச்சநீதிமன்றம் கூறி இருக்கிறது. இப்போது ஒத்திசைவுப் பட்டியல் குறித்து இந்த குழு ஆராய்ந்து தமிழ்நாடு அரசுக்கு அறிக்கை தர இருக்கிறது.

தமிழ்நாட்டின் உரிமைக்கான இந்த முக்கியத்துவமான அறிவிப்பை சட்ட சபையில் முதலமைச்சர் படித்துக் கொண்டிருக்கும் போது அதை அவமதிக்கும் வகையில் எதிர்க்கட்சியான அஇஅதிமுக வெளிநடப்பு செய்தது தமிழ்நாட்டிற்கு இழைத்த மகத்தான துரோகம். இதுவரை தமிழ்நாட்டில் தேர்தல் கூட்டணிகள் மட்டுமே இருந்து வந்தன ஆனால் எட்ப்பாடி பழனிச்சாமி பாஜகவையும் ஆட்சியில் சேர்த்துக் கொள்வோம் என்று தமிழ்நாட்டின் அதிகாரத்தை பாஜகவிடம் அடகு வைத்து விட்டார். இதற்காக மக்களின் கடும் கோபத்தை எதிர்வரும் தேர்தலில் நிச்சயம் சந்திப்பார். இந்த சீர்கேடான அரசியல் சூழலில் தமிழ்நாடு முதல்வர் எடுத்துள்ள முயற்சி மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

## ஆளுநர்கள், குடியரசுத் தலைவருக்குக் கடிவாளம்!

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் அரசியலமைப்புத் தலைவராக பதவி வகிக்கும் குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர்கள் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கோட்பாடுகளின்படியே நடக்க வேண்டும். அவர்களுக்கென்று தனி அதிகாரம் உள்ளதாகக் கருதக்கூடாது என்று ஆளுநர் ஆர். என்.ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் 415 பக்க தீர்ப்பில், ஆளுநர்களின் எதேச்சதிகாரப் போக்கிற்குக் கடிவாளம் போடும் பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

தீர்ப்பின் நகல் அனைத்து மாநில உயர்நீதிமன்றங்கள், ஆளுநர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவருக்கும் சில முக்கிய அறிவுரைகள் இத்தீர்ப்பில் வழங்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்புப் பிரிவு 201ன் கீழ் குடியரசுத் தலைவர் தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி மசோதாக்களை பரிசீலனை செய்ய வேண்டும். இதற்கு காலதாமதம் ஏற்பட்டால் அந்த மசோதா கொண்டு வந்ததன் நோக்கம் நீர்த்துபோகிவிடும். பிரிவு 201-இன் கீழ் குடியரசுத் தலைவர் தேவையில்லாமல் காலதாமதம் செய்யக்கூடாது. எனவே, மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு பரிசீலனைக்கு அனுப்புவது தொடர்பாக ஒன்றிய அரசு வழிகாட்டுதல்களை உருவாக்க வேண்டும். பேரறிவாளன் விடுதலை வழக்கிலும் ஆளுநர் முடிவெடுக்காமல் நீண்ட நாட்கள் தமிழ்நாடு அரசின் பரிந்துரையை நிறுத்திவைத்து பின்னர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கான அனுப்பிவைத்தார்.

ஆளுநரின் இந்த செயலற்றத் தன்மையை இந்த நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் அமர்வு ஆய்வு செய்து அரசின் முடிவை உறுதி செய்துள்ளது. நீண்ட காலதாமதத்திற்கு ஆளுநர்களின் செயலற்றத் தன்மையே காரணமாக உள்ளது. அதனால்தான் அரசியலமைப்பு உச்ச நீதிமன்றத்திற்கு தந்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்கிறது. சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதா ஆளுநரால் அரசுக்கு திரும்ப அனுப்பப்பட்டு எந்த மாற்றமும் செய்யப்படாமல் மீண்டும் அந்த மசோதா பேரவையில் நிறைவேற்றப்பட்டால் அந்த மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஆளுநர் நிறுத்திவைக்க கூடாது.

மாநில அரசின் ஆட்சிக்காலம் 5 ஆண்டுகள் மட்டுமே. அதற்குள் மக்களுக்கு நன்மை தரும் மசோதாக்களை அரசுகள் நிறைவேற்றும்போது அதற்கு ஆளுநர்கள் ஒப்புதல் தருவது தேவையாகிறது. அப்படியில்லாமல் 5 ஆண்டுகள் முடிந்த பிறகு அந்த மசோதாக்களுக்கு உயிர் கொடுத்தால், அது தேர்தல் நேரத்தில் பேசுபொருளாகிவிடும். இது அடிப்படை உரிமைக்கு எதிரானதாகும். எனவே, மாநில அரசு அனுப்பும் மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு ஒரு மாதத்திற்குள் ஆளுநர்கள் அனுப்ப வேண்டும். மசோதா குறித்து மாநில அமைச்சரவையின் அறிவுறுத்தலில் ஏதாவது முரண்பாடு இருந்தால் அந்த மசோதாவுக்கு எதற்காக ஒப்புதல் தரவில்லை என்ற தகவலுடன் 3 மாதங்களுக்குள் மாநில அரசுக்கு ஆளுநர் திரும்ப அனுப்ப வேண்டும்.

அமைச்சரவையின் அறிவுறுத்தலுக்கு முரணாக மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப ஆளுநர் முடிவெடுத்தால் அந்த மசோதாவை அதிக பட்சம் 3 மாதங்களுக்கு நிறுத்திவைக்கலாம். ஆளுநரால் அனுப்பப்படும் மசோதாக்கள் மீது குடியரசுத் தலைவர் 3 மாதங்களுக்குள் உரிய முடிவை எடுக்க வேண்டும். அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளதை குடியரசுத் தலைவர் பின்பற்ற வேண்டும். இல்லையென்றால் சம்மந்தப்பட்ட மாநிலம் நீதிமன்றத்தை அணுகலாம். ஒரு மசோதா திரும்ப அனுப்பப்பட்டு மீண்டும் நிறைவேற்றப்பட்டால் அந்த மசோதாவுக்கு ஒரு மாதத்திற்குள் ஆளுநர் ஒப்புதல் தர வேண்டும்.

ஆளுநர் அமைச்சரவையின் பரிந்துரைகளின்படியே செயல்பட வேண்டும் என்பது பொதுவான விதி. இதை உச்ச நீதிமன்றம் மத்தியப்பிரதேச சிறப்பு போலீஸ் வழக்கில் தெளிவுபடுத்தியுள்ளது. எனவே, அரசியலமைப்பு பிரிவு 200-க்கு முரணாக தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக தமிழ்நாடு ஆளுநர் நிறுத்திவைத்தது ரத்து செய்யப்படுகிறது. அரசியலமைப்புக்கு எதிராக அதிகாரிகள் வேண்டுமென்றே செயல்பட்டால், அது மக்களால் இந்த நாடு கட்டமைக்கப்பட்டதன் அடிப்படையையே பாழ்படுத்திவிடும். அரசியல் காரங்களுக்காக மாநில சட்டங்களுக்கு எந்த இடர்பாடுகளையும் ஏற்படுத்தாமல் ஆளுநர் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஆனால் ஆளுநர் ஆர்.என்.ரவியோ தீர்ப்பு வெளியான பிறகு, அதுகுறித்து எதுவும் பேசவில்லை. வழக்கம்போல எதிர்க்கட்சித் தலைவர்களைப் போல அரசுக்கு எதிராகப் பேசிக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டில் தலித்களுக்கு பாதுகாப்பு இல்லை என்கிறார், கல்வி உதவித் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் கல்லூரி செல்வோருக்கு தருவதால் கல்வித்தரம் உயராது என்கிறார். இந்தியாவில் தலித்கள் மீதான தாக்குதல்கள், வன்கொடுமைகள் அதிகம் நடக்கும் மாநிலங்களில் உத்தரப் பிரதேசம், பீகார், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா என பாஜக மற்றும் அதன் கூட்டணி ஆளும் மாநிலங்களே அதிகம் உள்ளன.உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 50 விழுக்காடு எட்டியுள்ளது. இந்த இலக்கை, தேசிய அளவில் எட்டவே 2030-ஆம் ஆண்டை இலக்காக வைத்திருக்கிறது ஒன்றிய அரசு. ஆனால் தமிழ்நாட்டில் கல்வித்தரம் சரியில்லை என ஆர். என்.ரவி உளறிக்கொண்டிருக்கிறார். உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்கொள்ள துணிவில்லாமல் வெளிப்படுத்தும் உளறல்களே இத்தகைய பேச்சுக்கள் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

# “இந்து மதத்தை நாசப்படுத்துகிற கொடிய நஞ்சு பார்ப்பனியமே”

**- விடுதலை இராசேந்திரன்**

அம்பேத்கரை உரையாற்ற அழைத்திருந்த ஜாத் பட்தோடக் மண்டல் அமைப்பில் 1920-ஆம் ஆண்டுகளில் துணைத் தலைவராக இருந்தவர் பெரியார். அப்போதும் பெரியாரை ‘நாத்திகர்’, ‘இந்து விரோதி’.‘பார்ப்பன எதிர்ப்பாளர்’ என்று தென்னாட்டுப் பார்ப்பனர்கள் கூறிய புகாரின் அடிப்படையில் பெரியார் துணைத் தலைவர் பதவியில் நீட்டிக்கப்பட்டவில்லை. அதே அமைப்புதான் 1936-இல் அம்பேத்கரை ஜாதி எதிர்ப்பு மாநாட்டுக்குத் தலைமை ஏற்க அழைத்து, அவரது உரையை மாற்றியமைக்க வற்புறுத்தி அம்பேத்கர் மறுத்த நிலையில் மாநாட்டையே நிறுத்தியது.



குடிஅரசில் பதிவுசெய்த அம்பேத்கர் உரையை ‘ஜாதியை ஒழிக்கும் வழி’ என்ற தலைப்பில் 4 அணா விலையில் நூலாக வெளியிட்டார் பெரியார். அம்பேத்கரின் உரை குறித்து காந்தியும் தனது ‘அரிஜன்’ நாளேட்டில் விமர்சித்து எழுதினார். அம்பேத்கர் எழுப்பிய வாதங்களுக்கு எந்த பதிலும் கூறாத காந்தி. “ஒரு மதத்தை அதன் மோசமான உதாரணங்களைக் கொண்டு மதிப்பிடக் கூடாது. அது உருவாக்கிய மிகச் சிறந்த உதாரணங்களைக் கொண்டே மதிப்பிட வேண்டும்” என்பதே காந்தியாரின் பதிலாக இருந்தது. வர்ணாஸ்ரம அமைப்பை நியாயப்படுத்திய காந்தி, “மற்ற எந்த வருணத்தையும்விட தங்கள் வருணமே உயர்ந்த அந்தஸ்து கொண்ட வர்ணம் என்று எந்த வர்ணத்தாரும் உரிமை கொண்டாடுதல் கூடாது” என்றார். பிராமணர் பற்றிய புரிதல் இன்மையால் காந்தி கொண்டிருந்த இந்தத் தவறான பார்வையை பெரியாரே நேருக்கு நேராகக் காந்தியிடம் பெங்களூரில் நடந்த விவாதத்தில் எடுத்துக்காட்டியதோடு “நீங்கள் இந்து மதத்தைச் சீர்திருத்தம் செய்ய முயன்றால் பார்ப்பனர்கள் உங்களை விட்டு வைக்க மாட்டார்கள்” என்று எச்சரித்தார். அதுதான் நடந்தது. பார்ப்பனியமே காந்தியின் உயிரை ‘கோட்சே’ உருவத்தில் பறித்தது.

## இந்துக்களின் ஆணவமே ஜாதி!

லாகூர் மாநாட்டுக்காக அம்பேத்கர் தயாரித்த உரை, ஜாதி அமைப்பின் இயங்கியலை மிகத் துல்லியமாக படம் பிடித்த ஆழமான சமூக ஆவணம். உதாரணத்துக்கு சிலவற்றைக் கோடிட்டுக் காட்டலாம்.

தங்கள் சமூக அந்தஸ்தைச் செயல்படுத்தும் வல்லமை பெற்றவர்களும், தங்களைவிடத் தாழ்ந்த நிலையில் இருந்தவர்கள்மீது அந்த அமைப்பைத் திணிக்கும் அதிகாரம் பெற்றவர்களுமான வக்கிர மனம் படைத்த இந்துக்களின் ஆணவத்தையும் சுயநலத்தையுமே ஜாதி அமைப்பு அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று ஜாதி அமைப்பைப் படம் பிடிக்கிறார்.

இந்து என்ற பெயர் எப்படி வந்தது என்பதை ஆராய்கிறார். “சுதேசிகளிடமிருந்து தன்னை இனம் பிரித்துக் காட்ட முகம்மதியர்களால் ‘இந்து’ என்ற பெயர் தரப்பட்டது. முகமதியரின் படையெடுப்புக்கு முந்தைய எந்த சமஸ்கிருதத நூலிலும் ‘இந்து’ என்ற சொல்லே காணப்படவில்லை. இந்துக்களுக்கு தாங்கள் பொதுவானதொரு சமூகம் என்ற சிந்தனையே இல்லாத காரணத்தால், தங்களுக்குப் பொதுவான பெயர் தேவை என்பதை அவர்கள் உணர்ந்திருக்க வில்லை” என்கிறார்.

இந்துக்கள் என்ற பெயர் ஏன் இல்லை என்பதற்கு சங்பரிவார்களின் தத்துவத் தந்தை கோல்வாக்கர் முன் வைக்கும் காரணத்தை அம்பேத்கரின் இந்த வாதம் அழுத்தமாக மறுக்கிறது. “நாம் அனாதிகள், தொடக்கமே இல்லாதவர்கள்: நாம்தான் இந்த மண்ணின் மைந்தர்கள் என்ற காரணத்தால் நமக்கென்று தனிப்பெயர் சூட்டிக் கொள்ளவில்லை; நம்மைத் தவிர மற்றவர்கள் ‘மிலேச்சர்கள்” என்பதே கோல்வாக்கரின் வாதம்.

“பொதுவான சமூகமாக ‘இந்து’ மதம் உருவாகாத காரணத்தால்தான் அவர்கள் பொதுப் பெயர் சூட்டிக்கொள்ளத் தேவை இல்லாத நிலை” என்பது அம்பேத்கர் தரும் மறுப்பு.

> **“ஜாதிகளின் மதமான இந்து மதத்தை மக்களுக்குக் கற்றுத் தந்திருக்கிற சாஸ்திரங்களே உங்களின் பயங்கர எதிரி. சாஸ்திரங்கள் புனிதமானவை என்ற நம்பிக்கையை அழித்தொழிப்பததோடு, புத்தரும் குருநானக்கும் செய்ததுபோல் சாஸ்திரங்களின் அதிகாரத்தை மறுக்கவேண்டும்” என்று, அம்பேத்கர் அழுத்தமாகக் குறிப்பிடுகிறார்.**

## பார்ப்பனர்களின் குரூரம்!

ஆயிரம் வேற்றுமைகள் இருந்தாலும் பழக்க வழக்கங்கள். நம்பிக்கைகள், சிந்தனைகள் ஆகியவற்றில் இந்துக்க ளிடையே ஒற்றுமை நிலவுகிறது என்றும். இந்த ஒற்றுமையே இந்துக்களின் வாழ்க்கையை அடையாளம் காட்டுவதாக இருக்கிறது என்றும் இந்துக்கள் தரப்பில் முன் வைக்கப்படும் வாதத்தை தகர்த்து எறிகிறார் அம்பேத்கர். பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைகளிடையே ஒற்றுமை இருப்பதாலேயே ஒரே சமூகமாகிவிட முடியாது. மனிதர்கள் கலந்து உறவாடுவதே ஒரு சமூகத்திற்கான அடிப்படை தேவை. இந்துக்கள் கொண்டாடும் விழாக்கள் ஒரே மாதிரியாக இருந்தும், ஒவ்வொரு ஜாதியும் அதை ஏன் தனித் தனியாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது? என்ற கேள்வியை எழுப்பும் அம்பேத்கர், சமூகவியலாளர்கள் கூறும் ‘குழு உணர்வு’ இந்துக்களிடம் இல்லாததால்தான். இந்துக்கள் ஒரு சமூகமாகவோ தேசமாகவோ உருவாக முடியவில்லை என்கிறார். பொதுவான பிரச்சினைகளைப் பரிமாறிக்கொள்வதே ஒரு சமூகத்துக்கான அடையாளம்; ஒரே நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் இருந்தால் மட்டும் சமூகமாகி விட முடியாது என்கிறார் அம்பேத்கர்.

முகமதியர்களும் கிறித்தவர்களும் மிரட்டிக் கட்டாயப்படுத்தி இந்துக்களை மதமாற்றம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு அம்பேத்கர் முன்வைக்கும் எதிர்க்கேள்வி மிகவும் வலிமையானது. “மோட்சம் போகவேண்டுமானால் அதற்கு எதைச் செய்யவேண்டும் என்று நாங்கள் நம்புகிறோமோ, அதையே மற்றவர்களும் செய்ய வேண்டும் என்று பார்ப்பனர்கள் கூறுவது மிரட்டல் அல்லவா? தான் கற்ற கல்வியை மற்றவர்கள் பெற்றுவிடக் கூடாது என்று மறைத்தது யார்? அறிவையும் பாரம்பரியப் பெருமைகளையும் தனது வளர்ச்சிக்கு மட்டுமே உரியதாக்கி, மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள மறுத்தார்களே அதற்குப் பெயர் என்ன? இதைவிடக் குரூரத்தையா, முகமதியர்களும், கிறித்தவர்களும் செய்தார்கள்?” என்று அம்பேத்கர் கேட்கிறார்.

இராமராஜ்யம் என்பது நால்வர்ண அமைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு இராஜ்யம் என்று கூறும் அம்பேத்கர், இராமன் சம்பூகனை ஏன் கொன்றான் என்பதையும் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

“சம்பூகன் தன் வர்ணமாகிய சூத்திர வர்ணத்தைவிட்டு பிராமணனாக மாற விரும்புகிறான். எனவே. சம்பூகனைக் கொல்வது ராமன் என்ற அந்த அரசனின் கடமையாகிறது. ராமன் சம்பூகனைக் கொன்றதற் கான காரணம் இதுதான். ஆக நால்வர்ண அமைப்பைக் கட்டிக் காக்க அவர்களுக்கு குற்றவியல் அதிகாரமும் தேவை என்பதையும் இக்கதை காட்டுகிறது” என்று சுட்டிக் காட்டுகிறார். இந்து, கிறித்தவ மதங்களில் மட்டும் ஜாதி இல்லையா? என்ற கேள்விக்கு அம்பேத்கர் அறிவார்ந்த விடையளிக்கிறார்:

## ஜாதி ஒரு மனநிலை!

‘ஒரு முகமதியனையோ, சீக்கியனையோ நீ யார்? என்று கேளுங்கள். தனக்கு ஒரு ஜாதி இருந்தபோதிலும் அவன் ஜாதியைச் சொல்லாமல் முகமதியன், சீக்கியன் என்றே பதில் கூறுவான். நீங்களும் அந்த பதிலில் திருப்தி அடைந்துவிடுவீர்கள். நீ சன்னியா, ஷேக்கா, சையதா, சாதிக்கா, பிஞ்சாரியா என்றெல்லாம் கேட்கப்போவது இல்லை. நான் ஒரு சீக்கியன் என்று கூறியதும் நீ ஜாட்டா. ரோதாவா, மாம்பியா, ராம்தாசியா என்றெல்லாம் கேட்பதும் இல்லை. ஆனால், நான் ஒரு இந்து என்று எவனாவது சொன்னால், நீங்கள் அந்தப் பதிலால் திருப்தியடைந்து விடுவதில்லை. அவனுடைய ஜாதி என்னவென்று விவரமாகத் தெரிந்துகொள்வது அவசியம் என்று உணருகிறீர்கள். ஒரு இந்துவைப் பொறுத்தமட்டில் அவனுடைய ஜாதி என்ன என்பதைத் தெரிந்துகொள்ளாமல், அவன் எத்தகைய ஒரு மனிதன் என்பதை உங்களால் உறுதியாகத் தெரிந்துகொள்ள முடியாது என்கிற அளவுக்கு ஜாதி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஜாதி என்பது இந்துக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்துவிடாமல் தடுக்கிற ஒரு செங்கல் சுவரோ, முள் வேலியோ அல்ல. அப்படி இருந்தால் அதைத் தகர்த்துவிடலாம் “ என்று கூறும் அம்பேத்கர், “ஜாதி என்பது ஒரு கண்ணோட்டம்; ஒரு மனநிலை; ஜாதியைத் தகர்ப்பது என்றால், இந்துக்களின் மனநிலையில் ஒரு மாறுதல் உண்டாக்க வேண்டும்” என்கிறார்.

ஜாதியை அழித்தொழிக்கும் உண்மையான வழிமுறை எது? என்ற கேள்விக்கு அம்பேத்கர் தரும் பதில் மிகவும் முக்கியமானது.

இன்னும் ஒரு படி மேலே சென்று. “ஜாதியை விட்டொழித்து விடும்படி மக்களைக் கேட்டுக்கொள்வது, மக்களின் மத நம்பிக்கை களுக்கு முற்றிலும் மாறுபட்டு நடந்துகொள்ளும்படிக் கேட்டுக் கொள்வதே ஆகும்” என்று, இந்து மத எதிர்ப்பே ஜாதி எதிர்ப்புக்கான அடித்தளம் என்று அறுதியிட்டு பறைசாற்றுகிறார்.

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற உரிமைக்காக பெரியார் தம் வாழ்நாள் இறுதிவரை போராடினார். இதில் ஜாதி ஒழிப்புக்கான ‘உயிர்நாடி’ இருக்கிறது என்பதை, ஆழமாகப் பரிசீலிக்காமல், அர்ச்சகர் ஆகி என்ன பயன்? என்ற மேம்போக்கான கேள்வியை எழுப்புகிறவர்களும் உண்டு. இதற்கு அம்பேத்கரே லாகூர் உரையில் பதில் அளிப்பதுபோல் பேசியிருக்கிறார்.

“புரோகிதத் தொழில் எல்லோருக்கும் பொதுவான ஒன்று என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கை, பார்ப்பனியத்தை ஒழிக்கவும். பார்ப்பனியத்தின் மறு வடிவமான ஜாதியை அழிக்கவும் துணைபுரியும். இந்து மதத்தை நாசப்படுத்துகிற கொடிய நஞ்சு பார்ப்பனியமே” என்பதே அம்பேத்கர் தந்த பதிலாகும்.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பெரியார் ஏன் எதிரிகளைப் பதற வைக்கிறார்? தமிழ்நாடெங்கும் சுற்றிச் சுழன்று பரப்புரை!



**சென்னை: 18/3/25** செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையம், உத்திரமேரூர் பேருந்து நிலையம், வந்தவாசி பழைய பேருந்து நிலையம், செய்யாறு - ஆரணி கூட்டுச் சாலை ஆகிய இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

கருத்துரையாற்றிய தோழர்கள்: இரா. உமாபதி, ரவிபாரதி, சுகுமார், ம.கி. எட்வின் பிரபாகரன், காஞ்சி அமுதன் (தமிழ் உரிமை கூட்டமைப்பு), அருண் கோமதி, திலகவதி (மக்கள் அதிகாரம்) ஆகியோர்.

பொன்ராஜ் - வீரமணி - கார்மேகம் கலைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அமீன் (தமுமுக), அ.வெ.முரளி (திக), ஆதித்ய கரிகாலன் ஆகியோர் உணவு ஏற்பாடுகளை செய்திருந்தனர். ஆதித்ய கரிகாலன் தங்கும் ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டார்.

சுகுமாறன், குமார், சூர்யா, கோபி, இரண்யா, வீரா, அசோக், முரளி, அருண் கோமதி, அருண் (இளைஞரணி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

**19/3/25** மதுராந்தகம் பேருந்து நிலையம், சோத்துப்பாக்கம் சந்திப்பு, திண்டிவனம் காந்தி சிலை, மயிலம் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் சென்னை அணியின் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

கருத்துரையாற்றிய தோழர்கள்: இரா. உமாபதி, பெரியார் சாக்ரடீஸ், பிரபா கல்வி மணி (பழங்குடியினர் இருளர் பாதுகாப்பு சங்கம்), ம.கி. எட்வின் பிரபாகரன், அருண் கோமதி, மாயவன் (நடுநாட்டு இலக்கியம்) ஆகியோர்.

பொன்ராஜ் - வீரமணி - கார்மேகம் - குபேந்திரன் கலைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. ஆதித்ய கரிகாலன், தெள்ளமிழ்து, திருமா சுந்தர் (விசிக), பூபால் (விசிக), பிரபா தண்டபாணி (திமுக) ஆகியோர் உணவு ஏற்பாடுகளை செய்திருந்தனர். பெரியார் சாக்ரடீஸ், பிரபா தண்டபாணி (திமுக) ஆகியோர் தங்கும் ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டார்.

புத்தக விற்பனை - 2,240. பெரும்பாலான நூல்களை வாங்கியவர்கள் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு காவலர் “நான் ஒரு பெரியார் வெறியன்” என்று அறிமுகப்படுத்திக் கொண்டு, பெரியார் மீதான விமர்சனங்களுக்கு பதிலடியாக உள்ள நூல்களை மட்டும் கேட்டறிந்து வாங்கிச் சென்றார்.

சுகுமாறன், குமார், சூர்யா, கோபி, இரண்யா, வீரா, அசோக், முரளி, அருண் கோமதி, அருண் (இளைஞரணி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

**20/3/25** விழுப்புரம் பேருந்து நிலையம், விக்கிரவாண்டி பேருந்து நிலையம் அரசூர் கூட்டுச் சாலை, பண்ருட்டி *jkr* ஜவுளி கடை அருகில் ,நெய்வேலி *NLC Gate arch* ஆகிய இடங்களில் கூட்டங்கள் நடைபெற்றன.

கருத்துரையாற்றிய தோழர்கள்: கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இரா. உமாபதி, பெரியார் சாக்ரடீஸ், ம.கி. எட்வின் பிரபாகரன், ஜீவானந்தம் (திமுக), நைனார் முகமது (திமுக), அருண் கோமதி, நெய்வேலி வெங்கடேஷ் (திமுக) ஆகியோர்.

பொன்ராஜ் - வீரமணி - கார்மேகம் - குபேந்திரன் கலைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கனிமொழி - பிருத்விராஜ் - பெரியார் பிஞ்சு திராவிட மகிழன் ஆகியோர் பகுத்தறிவுப் பாடல்களை பாடினர். பிரபா தண்டபாணி (திமுக), சந்திரசேகர் (திமுக), பாலு ஆகியோர் உணவு ஏற்பாடுகளை செய்திருந்தனர். கடலூர் சிவகுமார், பாலு ஆகியோர் தங்கும் ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டார். அம்பேத்கர் என்ற இளைஞர், கழகத்தில் இணைந்து கொண்டார்.

சுகுமாறன், குமார், சூர்யா, கோபி ,இரண்யா, வீரா, அசோக், முரளி, அருண் கோமதி, அருண் (இளைஞரணி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

**21/3/25:** அரியாங்குப்பம் மார்கெட், அரியாங்குப்பம், முதலியார் பேட்டை ஒதியன் சாலை அண்ணா சிலை, *Bussy* தெரு, பிள்ளைத் தோட்டம் பெரியார் சிலை ஆகிய இடங்களில் கூட்டங்கள் நடைபெற்றன.

கருத்துரையாற்றிய தோழர்கள்: லோகு. ஐயப்பன், இரா. உமாபதி, இளங்கோ (தபெதிக), மங்கையர் செல்வன் (தமிழ் மீனவர் விடுதலை வேங்கை), சுகுமார் (மக்கள் உரிமை கூட்டமைப்பு), அருண் கோமதி, அழகர் (தமிழர் களம்), பஷீர் (*Be Bold*) ஆகியோர்.

பொன்ராஜ் - வீரமணி - கார்மேகம் - குபேந்திரன் கலைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பெரியார் பிஞ்சு திராவிட மகிழன் பகுத்தறிவுப் பாடல்களை பாடினார். மாறன், லோகு அய்யப்பன் ஆகியோர் உணவு ஏற்பாடுகளை செய்திருந்தனர். தோழர் லோகு அய்யப்பன் தங்கும் ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டார்.
சுகுமாறன், குமார், சூர்யா, கோபி, இரண்யா, வீரா, அசோக், முரளி, அருண் கோமதி, அருண் (இளைஞரணி) ஆகியோர் கலந்து கொண்டனர்

**22/03/2025** கடலூர் பேருந்து நிலையம், பரங்கிப்பேட்டையிலும் பரப்புரைப் பயண விளக்க கூட்டம் நடைபெற்றது. கடலூரில் நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த தொண்டர் ஒருவர் துண்டறிக்கை கொடுக்கச் சென்ற கழகப் பெண் தோழரிடம் அநாகரிகமான முறையில் ஆபாச சொற்களைப் பேசினார். காவல்துறை எதுவும் செய்யாமல் வேடிக்கை பார்த்தது. காவல்துறையினர் கழகத் தோழர்களிடம் கடுமையான முறையில் நடந்து கொண்டனர். ஆனாலும் இந்த சலசலப்புக்கு அஞ்சாமல் கருஞ்சட்டைத் தோழர்கள் உற்சாகத்துடனும் மிகவும் எழுச்சியுடனும் பரப்புரையைத் தொடர்ந்தனர்.

பெரியார் பிஞ்சு மகிழன் மற்றும் கார்மேகம்- பொன்ராஜ் கலைக்குழுவினர் பறையிசை மற்றும் பகுத்தறிவுப் பாடல்களை பாடினர். உமாபதி, சென்னை மாவட்டச் செயலாளர், திவிக, இள.புகழேந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மாநில தேர்தல் பணிக்குழுச் செயலர், திமுக, சதீஷ், திவிக கடலூர், மங்கையர் செல்வம், நிறுவனத் தலைவர் தமிழ் மீனவர் விடுதலை வேங்கை அமைப்பு ஆகியோர் சீமானின் உண்மை முகத்தை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி 2 மணி நேரம் சிறப்பாக உரையாற்றினார்கள்.

சுகுமாறன், குமார், சூர்யா, கோபி ,இரண்யா , வீரா, அசோக், முரளி, திருப்பூர் பிரசாந்த், அருண் கோமதி, அருண் (இளைஞரணி), அருண் (ஆட்டோ) ஆகியோர் துண்டறிக்கை மற்றும் புத்தக விறப்பனை செய்து கடை வசூலிலும் ஈடுபட்டனர்.

## பள்ளிபாளையம் தோழர்கள் மீதான வழக்குகளும் ரத்து!

அதிமுக ஆட்சியில் பொள்ளாச்சியில் நடந்த மனிதத் தன்மையற்ற பாலியல் வன்கொடுமையைக் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக பள்ளிபாளையத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அன்றைய அதிமுக அரசு தோழர்கள் மீது பொய் வழக்குகளை போட்டது. அதேபோல் தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதித்த காஞ்சி விஜேந்திரனை கண்டித்து கொடும்பாவி எரிப்புப் போராட்டம் பள்ளிபாளையத்தில் நடத்தப்பட்டது. திருச்செங்கோடு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இரண்டு வழக்குகளிலும் கழகத் தோழர்கள் சரவணன், முத்துப்பாண்டி, கோபி, தியாகு, அஜ்மீர் ஆகியோர் விடுவிக்கப்பட்டனர் குமாரபாளையம் வழக்கறிஞர் கார்த்தி அவர்கள் சிறப்பாக வாதாடி தோழர்களை விடுவித்தார்.

## மகளிர் ஒன்று கூடல்!

திராவிடர் விடுதலைக் கழக சேலம் மாவட்ட மகளிர் அணி கலந்துரையாடல் கூட்டம் 30.03.2025 ஞாயிறு காலை 11.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை ஏற்காடு JP ரெசிடென்சில் சிறப்பாக நடைபெற்றது.

கடவுள் மறுப்பு வாசகம் திருப்பூர் யாழினி கூற கலந்துரையாடல் கூட்டம் தொடங்கியது. கலந்துரையாடல் கூட்டத்திற்கு சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தோழர் சுதா தலைமை வகித்தார். சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தோழர் திவ்யா வரவேற்புரை நிகழ்த்தினார். கலந்து கொண்ட தோழர்கள் அனைவரும் தங்களை அறிமுகம் செய்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்களும், தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் ஆசிரியர் தோழர் சிவகாமி அவர்களும் தோழர்களிடையே கருத்துரையாற்றினார்கள்.

மதிய உணவு இடைவேளைக்கு பிறகு குடும்பங்களில் கடைபிடிக்கப்படும் மூடநம்பிக்கையால் பெண்ணடிமைத்தனம் எவ்வாறு வளர்கிறது, பெண்கல்வியால் தமிழ் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தும் தோழர்கள் அனைவரும் தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர்.

இறுதியாக சேலம் மாநகரச் செயலாளர் தோழர் ஆனந்தி நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவு பெற்றது.

கலந்துரையாடல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்,

1). கொளத்தூரில் பெண்களே தலைமையேற்று 2025 மே மாதத்தில் நாத்திகர் விழா நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.
2). வைக்கம் சென்று பெரியார் போராட்டம் நடத்திய இடங்களை பார்வையிடுவது எனவும்,
3). மாதாந்திர கலந்துரையாடல் கூட்டம் புதிய பகுதிகளில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கொளத்தூர், காவலாண்டியூர், நங்கவள்ளி, இளம்பிள்ளை, சேலம், ஏற்காடு பகுதிகளில் இருந்து 26 தோழர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சிக்கான அரங்கு, தேநீர் ஏற்பாடுகளை தோழர்கள் டேவிட் - நந்தினி வழங்கினர். மதிய உணவு சேலம் மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள் வழங்கினார். நிகழ்ச்சி சிறப்புடன் நடைபெற சேலம் மாவட்ட இளைஞரணித் தலைவர் ஏற்காடு தேவா, செயலாளர் நங்கவள்ளி பிரபாகரன், கழக சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி கிருஷ்ணன், கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார், SMT சுரேஸ் ஆகியோர் இணைந்து செயலாற்றினர்.



Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : April 18, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran